செ.வெ.எண்:122 நாள்:26.02.2018

திருநெல்வேலி பாளையங்கோட்டை சாரால் தக்கர் மேல்நிலைப்பள்ளியில் தேசிய குடற்புழு தினத்தையொட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் மாணவிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கினார்.

----

திருநெல்வேலி பாளையங்கோட்டை சாரால் தக்கர் மேல்நிலைப்பள்ளியில் தேசிய குடற்புழு நீக்க தினத்தையொட்டி பள்ளி மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (26.02.2018) நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் மாணவிகளுக்கு குடற்புழு மாத்திரைகளை வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:-

தேசிய குடற்புழு தினத்தையொட்டி திருநெல்வேலி மாவட்டத்தில் 1 - முதல் 19 வயது வரை அனைவருக்கும் குடற்புழு நீக்க மருந்து / மாத்திரைகள் வழங்கப்படுகிறது. அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்பயிற்சி கல்லூரிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களிலும் குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்படுகிறது. திருநெல்வேலி சுகாதார மாவட்டத்தில் 1373 அங்கான்வாடிகள், 1204 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் 308 தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கும், சங்கரன்கோவில் சுகாதார மாவட்டத்தில் 1191 அங்கன்வாடிகள், 915 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் 252 தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கும் என மொத்தம் 2564 அங்கன்வாடிகள், 2119 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் 560 தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் மற்றும் உயர்கல்வி மாணவ, மாணவிகளை சேர்த்து திருநெல்வேலி சுகாதார மாவட்டத்தில் 5,80,279 நபர்களுக்கும், சங்கரன்கோவில் சுகாதார மாவட்டத்தில் 3,51,047 நபர்களுக்கு என திருநெல்வேலி மாவட்டத்தில் 9,31,326 நபர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இன்று முதல் 01.03.2018 வரை வழங்கப்படவுள்ளது. குடற்புழுக்களை நீக்கி உடல் சுகாதாரத்தை மேம்படுத்தும் இம் மாத்திரைகளை தவறாது எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுகாதார பணிகள் துணை இயக்குநர் மரு.செந்தில்குமார், மாநகராட்சி நகர் நல அலுவலர் மரு.பொற்செல்வன், பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.தங்கராஜ், மருத்துவ அலுவலர் மரு.தமிழரசி, சுகாதார அலுவலர் திரு.சுப்பிரமணி, பாளை வருவாய் ஆய்வாளர் திரு.பாலசந்திரன், சுகாதார ஆய்வாளர் திரு.இளங்கோ, பள்ளி தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.